முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03 திகதி முதல்
## சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 திகதி வரை
## (19.11.2023 ஞாயிறு முதல் 26.11.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமத்தின் காவலனே அரங்கா
தயவே வடிவான தேசிகா
கருமவினை வெல்லும் வித்தையை
கலியினில் தருமவழி வழிகாட்டும் குருராசா
2. அரசனே உன்அவதாரம் போற்றி
அகத்தியனும் வார ஆசியாக
தரணியில் இந்தியா தமிழகத்தில்
தக்க சோபகிருது தேள்திங்கள் சூலதிகதி மேல்
3. மேலாக தச திகதிவரை நடக்கும்
மொழிகுவேன் நிகழ்வாக வருங்கால
பலன்குறித்த ஆசி உரைப்பேன்
பண்பும் தரும குணமும் நிறைந்த
4. நிறைந்த இந்தியா தமிழகம்
நிலவுலகில் ஞானபலமிக்க பூமி
குறைத்து உலகம் மதிப்பிட முடியா
கொள்கையும் பிடிப்பும் கொண்ட பூமி
5. பூமிதனில் தியாகமும் தயவுமே
புண்ணிய வடிவாக வரலாறு இருக்க
நேமமிலா கலியின் பிடிப்பாக
நடப்பிலே தருமஞான தயவை மறந்து
6. மறந்து நடக்கின்ற கீழ்மேலான
மக்களாட்சி ஆளுமைகளும்
பரந்த மனப்பான்மை கொண்டு
பரிபக்குவமோடு ஆளுமை கொள்ளாவிடில்

7. கொள்ளாவிடில் இயற்கை சீறியே
குந்தகம் தேசங்கள் அடையும்
அல்லலுற பற்றாக்குறை ருணம்கூடி
ஆளுமைகட்கு ஆபத்து காண நேரும்
8. நேருமைபட போதும் என்கின்ற
நீதி அரசர்களாக சிற்றரசர்கள்
பெருமைபட தயவாக பங்களிப்பு
புரியவே அவரவர் பேருவிளங்கி
9. விளங்கி வரும் சந்ததிகட்கு
வில்லங்கம் நேரா வளர்ச்சி
களங்கமில்லா வாழ்வாக மாறும்
கலியினில் ஆளுமைக்கு சோரம் வாரா
10. வாராத பாதுகாப்பு மேன்மை
வளமிக்க பூமியாக இந்தியா தமிழகம்
பேருலகே மெச்ச தலைநிமிரும்
புண்ணிய வழிகண்டிட இந்தநிலை பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் **03**ம் நாள் **19.11.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் **10**ம் நாள் **26.11.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லாது தர்மங்களை செய்து இவ்வுலகினில் தர்மத்தை காக்கின்ற தர்மத்தின் காவலனே அரங்க மகா தேசிகனே முன் ஜென்ம பாவங்களான கர்மவினைகளையும் வென்று கடைத்தேறும் வழிமுறைகளை தர்மத்தின் வழியில் சென்று மீளும் சூட்சுமத்தை அருளும் குருராசனே அரங்க மகா தேசிகனே உமது அவதாரத்தை போற்றி வாழ்த்தியே அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூல்தனை இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் **03**ம் நாள் **19.11.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் **10**ம் நாள் **26.11.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகளாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

பண்பும் தரும குணமும் நிறைந்துள்ள ஞானதேசமான இந்தியா, தமிழகம் ஞானிகளின் ஆசி பெற்ற ஞானபலம் மிக்க பூமியாகும். உலகினில் மிகச் சிறந்த கொள்கையும், உறுதியும் மிக்க பூமியாகும். ஆனால் நிகழ் காலத்திலே மக்கள் தருமத்தையும், ஞானத்தையும், தயவையும் மறந்து நடக்கின்றார்கள் ஆட்சியர்களும் தயவு குறைந்தும் தருமம் மறந்தும் நடக்கின்றார்கள்.

பரந்த மனப்பான்மையும், பரிபக்குவமோடும் ஆட்சி செய்தால் நலம் பல விளையுமப்பா. தருமத்தின் நெறிகளுக்கு புறம்பாக நடந்திட்டால் இயற்கை சீற்றங்கள் உண்டாகும், பல குறைபாடுகள் நாட்டினில் உண்டாகுமப்பா. நாட்டில் பற்றாக்குறை உண்டாகி மக்கள் ஆபத்தான சூழலை சந்திக்க நேருமப்பா.

ஆதலினாலே போதுமென்ற மனதுடன் நீதி வழி நடந்து பெருமையுடன் நடந்து அவரவரும் மக்களிடத்து தயவுடன் நடந்திட்டால் அவரவரின் பெயர் சிறப்படைந்து பின்வரும் சந்ததிகளுக்கு எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் களங்கம் இல்லாமல் பாதுகாப்பும் மேன்மையையும் அடைந்து சிறப்படைவார்கள்.

தருமத்தின் வழிதனிலே நாடு நடந்திட்டால் பாதுகாப்பு பெரும் மேன்மையான சூழல் உருவாகி வளம் மிக்க பூமியாக இந்தியா தமிழகம் மாற்றம் அடையுமப்பா உலகமே மெச்சும்படி தலை நிமிர்ந்து நிற்குமப்பா. புண்ணியத்தின் வழியிலே மக்கள் செல்ல செல்ல எல்லா நன்மைகளும் நாட்டினில் உண்டாகுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–